ஐ.டி.எண்.7/2024 21.04.2026

**தொ.த.சாட்சி -1 திரு. நீலமேகம் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். தொ.த.சா.ஆ.1ல் என்னுடைய பணியானது வைண்டிங் பணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் அந்த அடையாள அட்டையில் தற்காலிக பணியாளர் என்று குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிர்வாகம் பாலிமர் என்ற பொருளை அடிப்படையாக வைத்து கைப்பை ஆகியவற்றை தயாரிக்கும் நிறுவனம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தொ.த.சா.ஆ.2 சம்பள ரசீதுகள் அனைத்தும் தனித்தனியான ஆவணங்களை இணைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரிதான். அதே நேரம் சம்பள ரசீதில் காணப்படும் விவரங்கள் அனைத்தும் பிரிண்ட் செய்யப்பட்டுள்ளன என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த சம்பள ரசீதில் என்னுடைய பணியானது வைண்டிங் பணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த சம்பள ரசீதுகளில் என்னுடைய அடிப்படை சம்பளம், H.R.A & D.A ஆகியவைகள் தனித்தனியாக குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளன என்றால் சரிதான். பி.எப் மற்றும் இ.எஸ்.ஐ சந்தா தொகையை பிடித்தம் செய்ததற்கான குறிப்பும் காணப்படுகிறது என்றால் சரிதான். நான் மாத சம்பளத்திற்கு தான் வேலை பார்த்தேன் என்றால் சரிதான். நான் தினக்கூலி அடிப்படையில் வேலை பார்க்கவில்லை. 14.02.2021 தேதியிட்ட சங்கத்தின் தீர்மான நகலை நான் தொ.த.சா.ஆ 3-ஆக தாக்கல் செய்துள்ளேன் சங்கத்தின் மீட்டிங் எங்கு நடைபெற்றது என்ற குறிப்பு அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். தொ.த.சா.ஆ 3-ல் இணைக்கப்பட்ட பெயர் பட்டியலில் சிலநபர்களின் பெயருக்கு எதிரே அவர்களின் கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். நபர்களின்

பெயர்களை நாங்கள் ஏற்கனவே எழுதி வைத்து விட்டு வந்த நபர்களிடம் மட்டும் கையெழுத்து பெற்றுக்கொண்டோம் என்றும் அதனால் தான் வராத நபர்களின் பெயர்களுக்கு எதிரே அவர்களின் கையொப்பம் காணப்படவில்லை என்றால் சரிதான். தொ.த.சா.ஆ 3-ஆன தீர்மானத்தின் நகலை யார் எழுதினார் என்ற குறிப்பு எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் தொ.த.சா.ஆ 3-ஐ யார் எழுதினார்கள் என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். தொ.த.சா.ஆ 3ல் எஸ். நாகராஜன் மாநில துணை தலைவர் என்று காணப்படுகிறது என்றால் சரிதான் ஆனால் அவர் அந்த ஆவணத்தில் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். 14.02.2021க்கு முன்பு ரமேஷ் மற்றும் நாகராஜனை எனக்கு தெரியாது என்றால் சரிதான். தொ.த.சா.ஆ 3-ல் 14.02.2021 தீர்மானம் நிறைவேற்றப்பட்ட தேதிக்கு முன்பு தொழிற்சங்கத்திற்கும் எதிர் மனுதாரருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்பது குறித்தும் குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த தொழிற்சங்கத்தால் இயற்றப்பட்ட தீர்மானங்களில் டி.ரமேஷ் என்ற நபர் குறித்து குறிப்புகள் காணப்படுகின்றன. அந்த நபர் எதிர் மனுதாரர் நிர்வாகத்தில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். தொழிற்சங்கத்தின் ஆவணத்தில் டி.ரமேஷ் என்பவர் செயலாளர் என்ற அடிப்படையில் கையொப்பம் செய்துள்ளார் அவர் எப்போது செயலாளராக ஆனார் என்றால் 14.02.2021 அன்று செயலாளராக ஆனார். ஆனால் தொ.த.சா.ஆ.3ல் அவர் பெயர் எங்கும் காணப்படவில்லை என்றால் சரிதான். 14.02.2021 தேதியிட்ட தீர்மானத்தில் ரமேஷ் கையொப்பம் இடவில்லை என்றால் சரிதான். அவருடைய பெயரும் அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். 14.02.2021 அன்று எந்த மீட்டிங்கும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக இந்த

ஆவணத்தை தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. தொ.த.சா.ஆ.4ஐ யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அதில் ரமேஷ் என்பவரின் கையொப்பம் எதுவும் காணப்படவில்லை. அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்ட இணைப்பிலும் கையொப்பம் மற்றும் முத்திரைகள் எதுவும் காணப்படவில்லை என்றால் சரிதான். தொ.த.சா.ஆ.5-ஆக தொழிற்சங்கத்தின் தீர்மானத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த தீர்மான நகலை யார் எழுதினார்கள் என்ற விவரம் அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். அந்த சங்கத்தின் கூட்டம் நடைபெறும் பொழுது வழக்கறிஞர் திரு.கிரிஸ்டோபர் அங்கு இருந்தார் என்றால் சரிதான். அந்த தீர்மான நகலின் இரண்டாம் பக்கம் நிறைவடையாமல் உள்ளது என்றால் நாங்கள் சரியாக பிரிண்ட் எடுக்கவில்லை. அந்த தீர்மானத்தினை யார் எழுதினார்கள் என்ற குறிப்பு அதில் காணப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் தொ.த.சா.ஆ.5 ஐ யார் எழுதினார்கள் என்று நான் கூறவில்லை என்றால் சரிதான். தொ.த.சா.ஆ 6-ல் பக்கம் 4-ல் பத்தி எண் இ-ல் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 124 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சங்கத்தில் அவ்வளவு உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 16.09.2021 அன்று யுனியன் கடிதம் அனுப்பியிருந்தது என்றால் சரிதான் அது தொ.த.சா.ஆ.8. அதில் எனது வேலை சம்மந்தமாக எந்த விவரமும் காணப்படவில்லை என்றால் சரிதான். தொ.த.சா.ஆ.12 தான் நிர்வாகம் எனக்கு வேலை வழங்கவில்லை என்று நான் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு தாக்கல் செய்த மனு என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 03.03.2021 அன்று முதல் எனக்கு நிர்வாகம் வேலை வழங்கவில்லை என்று நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த மனுவானது

12.10.2022 அன்று தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 1 வருடம் 5 மாதங்கள் காலதாமதமாக ஏன் மனு தாக்கல் செய்தேன் என்பதற்கான காரணங்கள் எதுவும் நான் கூறவில்லை என்றால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் நான் நிர்வாகத்திற்கு கடிதம் எதுவும் அனுப்பியதாகவும் நான் எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். நான் கடைசியாக வேலைக்கு சென்றது 03.03.2021 அன்று தான் என்றால் சரிதான். அந்த மாதத்திற்கு நான் சென்ற நாட்கள் வரை சம்பளம் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு சமரச பேச்சுவார்த்தைக்காக சென்றிருந்தேன். அப்போது தொழிற்சங்க உறுப்பினரும் உடன் வந்திருந்தார். நிர்வாகம் பதில் தாக்கல் செய்தது என்றால் சரிதான். நான் அதை படித்து பார்த்தேன். அந்த பதிலில் நிர்வாகம் என்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் என்னை வேலை விட்டு நீக்கவில்லை என்றும் தெரிவித்திருந்தது என்றால் சரிதான். ஆனால் நான் நேரில் சென்ற போது நிர்வாகம் எனக்கு பணி வழங்கவில்லை. நான் நேரில் சென்ற பின்பு நிர்வாகம் எனக்கு வேலை வழங்கவில்லை என்று குறிப்பிட்டு நிர்வாகத்திற்கு நான் கடிதம் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரிதான். 03.03.2021க்கு முன்பு நான் பணியில் இருந்து போது நானாக தான் பணிக்கு செல்வேன். நிர்வாகம் என்னை பணிநீக்கம் செய்யவில்லை என்று பதில் தாக்கல் செய்த பின்னர் நான் வேலைக்கு செல்ல தயாராக இருக்கிறேன் என்று தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த நீதிமன்றத்தில் நிர்வாகம் பதில் தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அதனை நான் படித்து பார்த்தேன். அந்த பதிலிலும் நிர்வாகம் என்னை வேலை விட்டு நீக்கவில்லை என்றும் நானாக தான் வேலைக்கு வரவில்லை என்று கூறியிருந்தது என்றால் சரிதான். நிர்வாகம் பதில் தாக்கல் செய்த பின்னர்

வழக்கை வாபஸ் பெறும்படி நான் எனது வழக்கறிஞரிடம் எதுவும் கூறவில்லை என்றால் கூறினேன். 3 வருடங்கள் காலதாமதம் ஆனதால் நான் அவ்வாறு கூறினேன். மேலும் நான் வேலைக்கு செல்ல தயாராக இருக்கிறேன் என்று அனுமதி கோரி மனு எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் சேர்ந்து மொத்தம் 14 நபர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். அதில் 6 நபர்களுக்கு நிர்வாகம் வேலை நீக்கம் உத்தரவு வழங்கியது என்ற விவரம் எனக்கு தெரியும். 6 நபர்களை தவிர மற்றவர்களுக்கு நிர்வாகம் வேலை நீக்க உத்தரவு வழங்கவில்லை என்றால் சரிதான். எண்ணிக்கை அதிகப்படுத்தி காட்டுவதற்காக தான் நிர்வாகம் வேலைநீக்கம் செய்யாத நபர்களும் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எனது வேலை சம்மந்தமாக வேறு வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனக்கு திருமணமாகி 4 குழந்தைகள் உள்ளனர். நான் கைபேசி வைத்துள்ளேன். இருசக்கர வாகனம் வைத்துள்ளேன். நிர்வாகம் என்னை வேலைநீக்கம் செய்தபிறகு எவ்வாறு நான் குடும்பம் நடத்துகிறேன் என்ற விவரத்தை நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் நான் கூலி வேலை செய்வதாக கூறியுள்ளேன். எங்கு கூலி வேலை செய்கிறேன் வருமானம் எவ்வளவு என்ற விவரங்களை நிரூபண வாக்குமூலத்தில் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய நிரூபண வாக்குமூலம் பத்தி 35ல் நான் எங்கும் வேலை பார்க்கவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தற்போதும் நான் யுனியனில் உறுப்பினராக உள்ளேன். எனக்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்க்க விருப்பம் இல்லை என்றும் தொழிற்சங்க காரணங்களுக்காக தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணியில் இருக்கும் பொழுது நிர்வாகம் என் மீது எந்த

குற்றச்சாட்டும் சுமத்தவில்லை என்றும் தொழிற்சங்க காரணங்களுக்காக தான் நிர்வாகம் என்னை வேலை நீக்கம் செய்தது என்று நான் கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னை நிர்வாகம் பணிநீக்கம் செய்யவில்லை என்றும் தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வேலை செய்ய விருப்பம் இல்லாத காரணத்தினால˙ தான் பணியில் இருந்து நின்றுவிட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.04.21 14:47:10 +0530

Presiding Officer,
Principal Labour Court,
Vellore.